4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 623/2022 நாள்: 25.02.2026 பி.வா.சா.1 – ராணி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

இந்த வழக்கில் வாதிகளை எனக்கு தெரியாது. மேற்படி வாதிகள் மீது காவல் நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ குற்றப்புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு எதிராக சிவில் வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 25.07.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணப்படி எனது கணவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தினுடைய ஆவணங்களை நான் நகல் எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆன அடமான கடன் பத்திரத்தில் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பமல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலமும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி எதிர்வழக்குரையிலும், முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலமும் வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பமல்ல என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போது வரை வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தை பார்க்கவில்லை. எதிர்வழக்குரை, முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் உள்ள சங்கதிகளை நான் தான் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். சிவக்குமார் என்பவர் எனது கணவரின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 அடமான கடன்

பத்திரத்தில் எனது கணவரின் சகோதரர் சிவக்குமார் ஒரு சாட்சி என்று எனது வழக்கறிஞர் சொல்லி எனக்கு தெரியும். மேற்படி வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தை நான் பார்க்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் குறிப்பாணை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அடமான கடன் பத்திரத்தில் ஆறுமுகம் சாட்சி கையொப்பம் போட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சாட்சி கையொப்பமிட்டுள்ள சிவக்குமார் மீது பிரதிவாதிகளாகிய நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாகவோ, பிற சொத்துக்கள் சம்பந்தமாகவோ மேற்படி சிவக்குமாருக்கு எதிராக வழக்கு எதுவும் இதற்கு முன்பும், தற்போதும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். எனது கணவர் இறக்கும் வரை நான் அவரோடு சேர்ந்து வாழவில்லை, 2015 ம் ஆண்டே நான் அவரை விட்டு பிரிந்துவிட்டேன். மேற்படி வா.சா.ஆ.1 அடமான கடன் ஏற்படுத்தும் தேதியில் நான் மற்ற பிரதிவாதிகளுடன் எனது கணவருடன் சேர்ந்து வாழவில்லை. நான் மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்திய காலத்தில் சேர்ந்து வாழாததால் மேற்படி ஆவணத்தை ஏற்படுத்தும் போது சார் பதிவாளர் அலுவலகத்தில் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணம் ஏற்படுத்தும் போது உடனில்லாததாலும், எனது கணவருடன் அப்போது சேர்ந்து வாழாததாலும், மேற்படி ஆவணங்கள் பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது, அனுமானத்தின் அடிப்படையில் தான் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தரப்பு ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு முதல் இந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 2018 வரை எனது கணவர் என்ன தொழில் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சாட்சி தெரியும், எனது கணவர் விவசாயம் செய்து வந்தார் என்று கூறுகிறார். தாவா சொத்தில்

தென்னந்தோப்பும், மாந்தோப்பும் உள்ளது. 2018 ம் ஆண்டு முதல் யார் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. நானும், மற்ற பிரதிவாதிகளும் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து அடமானத்தில் உள்ள விவரம் எனது கணவர் இறந்து 6 மாதங்கள் கழித்து எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ.9 முதல் 11 ல் உள்ள கையொப்பங்கள் எனது மகன் 3வது பிரதிவாதியின் கையொப்பங்களாகும். அடமான கடன் சம்பந்தமாக வாதிகள் 07.07.2021 ல் பிரதிவாதிகளாகிய எங்களுக்கு ஒரு அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். 22.04.2021 ல் எனது கணவர் காலமானார். மேற்படி அறிவிப்பிற்கு பதிலறிவிப்பு நாங்கள் அனுப்பவில்லை என்றால் சரிதான், ஏனென்றால் எங்கள் கைவசம் எந்த ஆவணங்களும் இல்லை. வா.சா.ஆ.4 முதல் 6 வரையிலான ஒப்புதல் அட்டைகளில் உள்ள கையொப்பங்கள் என்னுடைய கையொப்பங்கள் தான். 11.06.2022 அன்று வாதிகள் மீண்டும் ஒரு அறிவிப்பை பிரதிவாதிகளான எங்களுக்கு அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு அறிவிப்புகளிலும், வாதிகள் எனது கணவர் எழுதி கொடுத்த அடமான கடன் பற்றியும், கடனுறுதி சீட்டு பற்றியும் தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். எனவே சத்திய பிரமாண வாக்குமூலத்தில் வாதிகள் அறிவிப்பு அனுப்பவில்லை என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது கணவர் அடமான கடன் பத்திரம் வாதிகளுக்கு எழுதி கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும், வாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆன கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பமல்ல. 2015 ம் ஆண்டிற்கு பின்னிட்டு எனது கணவர் இவ்வாறு தான் கையொப்பமிடுவார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். 2018 முதல் 2020 ம் ஆண்டு வரை எனது கணவர் கையொப்பமிட்டதாக சொல்லப்படும் ஆவணம் எதுவும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆன கடனுறுதி சீட்டில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.2 ஆன கடனுறுதி சீட்டு சம்பந்தமாக தற்போது வரை அறிந்து கொள்வதற்கு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆன கடனுறுதி சீட்டு சம்பந்தமாக வாதிகளுக்கு எதிராக குற்றப்புகார் எதுவும் நாங்கள் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது மாமனாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது. எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டதால், எனது கணவர் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எனது மாமனார் எழுதி வைத்தார் என்றால் சரிதான், முதலில் எனது கணவரின் சகோதரர் சிவக்குமார் பெயருக்கு எழுதி வைக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டு எனது கணவர் பெயரிலும், சிவக்குமார் பெயரிலும் தனித்தனியே சொத்துக்களை எனது மாமனார் எழுதி வைத்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி தாவா சொத்துக்கள் எனது கணவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது கணவருக்கு தாவா சொத்து தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்பதால் அவர் விருப்பம் போல் யாருக்கு எழுதி வைக்கவும், அதன் பேரில் கடன் பெறவும் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. 05.09.2018 அன்று எனது கணவர் வாதிகளிடம் ரூ.20 லட்சம் கடனாக வாங்கி கொண்டு அடமான கடன் பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். மேலும் மேற்படி எனது கணவர் கூடுதலாக ரூ.1 லட்சத்தை வாதிகளிடம் கடனாக பெற்றுக்கொண்டு 19.07.2020 ல் கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி எனது கணவர் வாங்கிய அடமான கடன் மற்றும் கூடுதலாக வாங்கிய கடன் ஆகியவற்றை பிரதிவாதிகளாகிய

நாங்கள் செலுத்த கடமைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.25 16:16:07 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.